இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ ஊழியத்தின்

# வளரும் செடி

ஆண்டு சந்தா ரூ.25 தனிப்பிரதி ரூ.3

மலர் 17 ஜனவரி 2026 மணம் 10



# இதயந்திறந்து

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

ஆலயம் மேகத்தினாலே நிறைந்திருந்தது; பிரகாரமும் கர்த்தரின் மகிமையின் பிரகாசத்தினால் நிரம்பிற்று என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். புதிய வருடத்தைத் தந்த கர்த்தரை துதிப்போம். புதுப்புது தீர்மானங்களுடன், வாக்குத்தத்தங்களுடன் அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். முடிவுப்பரியந்தம் வார்த்தையில் நிலைத்திருந்து ஜெயத்தைச் சுதந்தரிப்போம்.

“உள்ளங்கை மேகம் எழும்புகிறது” என்பது பெருமழையின் அடையாளமாக இருக்கிறது. நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஆசீர்வாதமான மழையைக் கர்த்தர் கட்டளையிடுவாராக! ஆசீர்வாதமான நன்மையைச் சுதந்தரிக்க நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்வோமாக! அவருடைய இரக்கங்கள் மகா பெரியது.

நமது மிஷனரி பணிகளுக்காகவும், பணித்தள பணிகளுக்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம். கர்த்தரே காரியங்களை வாய்க்கப்பண்ணுவாராக! விசுவாசப்பிள்ளைகள் கர்த்தரிலும், வார்த்தையிலும் தைரியமாய்த் திடமாய் நிற்க ஜெபிப்போம். அவர்களது சொந்தங்கள் வேற்று மார்க்கத்தில் இருக்கிறபடியால், பழைய சடங்காச்சாரங்களில் சிக்கிவிடாதிருக்க ஜெபியுங்கள்.

புதிய வருட ஊழியங்களுக்காக, வளர்ச்சிக்காக. அதினுடைய தேவைகள் சந்திக்கப்பட கர்த்தரே காரியங்களை நிறைவேற்ற ஜெபியுங்கள் . தொடர்ந்து ஜெபத்தில் இணைந்திருப்போம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

தேவ கிருபை நம்மில் பெருகுவதாக

ஜெபத்துடனும் அன்புடனும்

**சகோ. ஜான் *M.* ஜெயராஜ்**

## தேவ ஈவு நற்செய்திக் கூட்டங்கள் - 2026

(17 ஆவது கன்வென்ஷன்)

இடம்: **தேவ ஈவு வளாகம், டோனவூர்.** ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

நாள்: **2026 ஜனவரி 10, 11** (சனி, ஞாயிறு)

நேரம்: மாலை **7.00** மணி

**பகல் கூட்டம் ஞாயிறு காலை 10.30 மணி**

நற்செய்தியாளர்: **சகோ. T.தேவ சகாயம்**

(ஆத்தும நங்கூர ஊழியங்கள், நெய்வேலி)

**யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

மேலும் விபரங்கட்டு: சகோ. ஜான் M. ஜெயராஜ், Cell 9443113292

*E-mail: yesujeevikkirar @ gmail.com, Website: www.jesuslivesministries.in*

**மன்னா:**

# உள்ளங்கை மேகம் எழும்புகிறது

**இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனை சிறிய மேகம் எழும்புகிறது... என்றான். (1இரா. 18:44)**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ஒரு அடையாளத்தை வேண்டிக்கொள் என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒவ்வொரு மாதத்திலும் தமது மன்னாவினால் நம்மை ஆசீர்வதிக்கிற ஆண்டவர், இந்த மாதத்திலும் நமக்காகவே விசேஷித்த மன்னாவை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் எனும் வசனத்தின்படி நம்மை ஆசீர்வதிப்பாராக!

கடந்த மாதம் பண்டிகை மாதமாகையால், **"அருணோதயம் நம்மைச் சந்திக்கிறது."** எனும் தலைப்பின் கீழாக கிறிஸ்துமஸ் செய்தியைக் கேட்க கர்த்தர் கிருபை செய்தார். அருணோதயமாகிய இயேசு உங்களையும் சந்தித்திருப்பார் என்று விசுவாசிக்கிறேன்.

புதிய வருடத்திற்குள் பிரவேசிக்கும்படியான பாக்கியத்தை தந்த தேவனைத் துதிப்போம். இந்த வருடத்திற்கான வாக்குத்தத்த வார்த்தையாவது, **"உள்ளங்கை மேகம் எழும்புகிறது"** என்பதாகும். ஒரு பெருமழையின் ஆசீர்வாதத்திற்கு ஓர் அடையாளம் தான் உள்ளங்கை மேகம். மேகம் எழும்புகிறதை நீங்கள் காணும்போது, மழைவருமென்று சொல்லுகிறீர்கள். அந்தப்படியுமாகும். (லூக். 12:54)

எலியா ஆகாபை நோக்கி: நீர் போம், போஜனபானம் பண்ணும், பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது என்றான். ஆகாப் போஜனபானம் பண்ணப்போனான்; பின்பு எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்காலில்படக் குனிந்து, தன் ஊழியக்காரனை நோக்கி: நீ போய் சமுத்திரமுகமாய்ப் பார் என்றான்; அவன் போய்ப் பார்த்து, ஒன்றும் இல்லை என்றான். நீ இன்னும் ஏழுதரம் போய்ப் பார் என்றான்.

ஏழாந்தரம் ஊழியக்காரன் இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனைச் சிறிய மேகம் எழும்புகிறது என்றான். அப்பொழுது எலியா, நீபோய் ஆகாபை நோக்கி: மழை உம்மைத் தடைசெய்யாதபடிக்கு, இரத்தைப் பூட்டி போய்விடும் என்று சொல் என்றான். அதற்குள்ளாக வானம் மேகங்களினாலும், காற்றினாலும் கருத்து பெருமழை உண்டாயிற்று; ஆகாப் இரதத்தில் ஏறி யெஸ்ரயேலுக்குப் போனான். கர்த்தருடைய கை எலியாவின் மேல் இருந்ததினால், அவன் தன் அரையைக் கட்டிக்கொண்டு, யெஸ்ரயேலுக்கு வருமட்டாக ஆகாபுக்கு முன் ஓடினான்.

அன்பு நேசப்பிள்ளைகளே! இப்புதுவருடத்தில் நமது குடும்பத்திலும், வாழ்விலும், தொழிலும், ஊழியத்திலும் ஒரு ஆசீர்வாத மழையைக் கர்த்தர் பெய்யப் பண்ணுவார். அதற்கான அடையாளமே உள்ளங்கை மேகம். மேகம் எழும்புகிறது என்றால் நன்மையும் விடுதலையும் ஆரம்பமாகிவிட்டது என்று அர்த்தம். அந்த நன்மையைச் சுதந்தரிப்பதில் கவனமாய் செயல்படும்படி நாம் அழைக்கப்படுகிறோம். தமிழில் ஒரு பழமொழி உண்டு. **யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே!**

கிராமங்களில் வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை அடையாளப்படுத்தும்படி மணிகளைப் பயன்படுத்துவார்கள். பால்வியாபாரி, ஐஸ்வியாபாரி, பஞ்சுமிட்டாய் வியாபாரி.... (மற்றும் பல) ஒவ்வொரு மணியின் ஓசைக்கும் வித்தியாசம் உண்டு. அந்த ஓசையை வைத்து, என்ன வியாபாரம் வருகிறது என்பதை அறிந்து கொள்ளலாம். அதுபோலவே, வளர்ப்பு யானையில் மணி கட்டியிருப்பார்கள். அந்த மணியின் ஓசை யானை வருகிறது என்பதற்கு அடையாளமாகும்.

**நான் ஏற்றக் காலத்திலே மழையைப் பெய்யப் பண்ணுவேன்,**

**ஆசீர்வாதமான மழை பெய்யும்... (எசே. 34:26)**

ஆசீர்வாதமான மழைக்கான மேகம் எழும்புகிறது, பெருமழையின் ஆசீர்வாதம் ஆரம்பமாகிறது. ஜெபத்துடன் தொடருங்கள். கர்த்தர் இயேசு நம்மிடம் பேசுவராக!

## 1. உங்கள் காரியம் ராஜ சமூகத்தில் பேசப்படுகிறது.

**எபிரெய பிள்ளையாண்டான் ஒருவன் சிறைச்சாலையில் எங்களோடே இருந்தான். அவனிடத்தில் சொப்பனங்களைச் சொன்னோம். அவன் நாங்கள் கண்ட சொப்பனங்களுக்குரிய வெவ்வேறு அர்த்தத்தின்படியே எங்கள் சொப்பனத்தின் பலனைச் சொன்னான். அவன் எங்களுக்கு சொல்லிய அர்த்தத்தின்படியே நடந்தது. (ஆதி. 41:12,13)**

போத்திபார் தன் வீட்டுக்கு வருமளவும் அவனது மனைவி யோசேப்பின் வஸ்திரத்தைத் தன்னிடத்தில் வைத்திருந்து, அவனை நோக்கி: நீ நம்மிடத்தில் கொண்டு வந்த அந்த எபிரெய வேலைக்காரன் சரசம் பண்ணும்படிக்கு என்னிடத்தில் வந்தான் என்றாள். தன் மனைவி தன்னோடே சொன்ன வார்த்தைகளை அவன் கேட்டபோது அவனுக்கு கோபம் மூண்டது. எஜமான் யோசேப்பை சிறைச்சாலையிலே ஒப்புவித்தான். அவன் அந்த சிறையிலிருந்தான்.

யோசேப்பு சிறையிலிருக்கும்போது, அவனோடிருந்த இருவர் சொப்பனங் கண்டு, அதினிமித்தம் துக்கமுகமாயிருந்தார்கள். யோசேப்பு அவர்களின் சொப்பனத்திற்கு சொன்ன அர்த்தத்தின்படியே நடந்தது. அவர்களில் ஒருவன் ராஜாவுக்கு திராட்சரசம் கொடுக்கிற பானபாத்திரக்காரன். அவன் யோசேப்பை நினையாமல் மறந்துவிட்டான்.

இரண்டு ஆண்டுகளுக்குப்பின் பார்வோனுக்கு இரண்டு சொப்பனம் உண்டானது. அதின் அர்த்தத்தை ஒருவரும் சொல்லக்கூடாமற்போயிற்று. அப்பொழுது பானபாத்திரக்காரன், “நான் செய்த குற்றம் இன்றுதான் என் நினைவில் வந்தது.” என்று பார்வோனிடத்தில் சொன்னான். யோசேப்பின் காரியம் ராஜாவின் சமூகத்தில் பேசப்பட்டது. அதினிமித்தம் யோசேப்பை பார்வோன் அழைப்பித்தான்.

அன்பு நேசப்பிள்ளைகளே! யோசேப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தான். எந்தக் குற்றமும் செய்யவில்லை. அவன் மனம் எப்படியிருந்திருக்கும் என்பதைக் கவனியுங்கள்...

**1. ஆதி. 39:14** – அபாண்ட பழி

**2. ஆதி. 39:17** – **எஜமானிடத்தில் பிராது**

**3. ஆதி. 39:20** – **எஜமான் ஏதும் விசாரிக்கவில்லை.**

பாஸ்டர் வீட்டில் போராட்டம் (லூக்.1:25)

**4. ஆதி. 40:15 – நான் ஒரு குற்றமும் செய்யவில்லை.**

**5. ஆதி. 40:23 – பானபாத்திரக்காரரின் தலைவன் அவனை மறந்து விட்டான்.**

எனக்கன்பானவர்களே! உள்ளங்கை மேகம் எழும்புகிறது என்பது, சிறைச்சாலையிலிருக்கும் யோசேப்பின் வாழ்வில் ஒரு வெளிச்சம் உண்டாகிறது. அதாவது பார்வோன் யோசேப்பை அழைப்பித்தான். பார்வோனின் சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லப்படுகிறது. ராஜா அவனை, தனக்கு அடுத்த ஸ்தானத்தில் உயர்த்தினான். வேதாகமத்தில் சிலரின் அனுபவங்கள் ராஜா சமூகத்தில் பேசப்பட்டதினால் அவர்கள் உயர்வடைந்தார்கள்.

**1. ஆதி. 24:30 – லாபான், ரெபெக்காள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டான்.**

**2. யாத். 2:17–20 – ஒரு எகிப்தியன் எங்கள் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான்.**

**4. ரூத். 2:5 – இந்தப் பிள்ளையை வளர்க்க, பால் கொடுக்கிற ஒரு ஸ்தீரியை அழைத்து வரட்டுமா?...**

**5. தானி. 5:12 – தானியேல் அழைக்கப்படட்டும், அவன் அர்த்தத்தை வெளிப்படுத்துவான்.**

அன்பு நேசப்பிள்ளைகளே! பார்வோனால் அழைக்கப்பட்ட யோசேப்பு மீண்டும் சிறைச்சாலைக்கு அனுப்பப்படவில்லை. உங்கள் காரியம் தேவ சமூகத்தில் பேசப்படுவதினால், இனி உங்களுக்கு விடுதலையும் ஜெயமும் உண்டு. கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுகிறார். இனி தீங்கைக் காணாதிருப்பீர்கள்.

## 2. நம்பிக்கை அற்றுப்போன நிலையில் ஓர் நம்பிக்கை

**பதினாலாம் இராத்திரியானபோது, நாங்கள் ஆதிரியாக் கடலிலே அலைவுபட்டு ஓடுகையில், நடு ஜாமத்திலே கப்பலாட்களுக்கு ஒரு கரை கிட்டிவருகிறதாகத் தோன்றிற்று...(அப். 27:27)**

பவுலும் அவனோடே 276 பேர் பயணித்த கப்பல் பயணம் புறப்பட்டது. கொஞ்ச நேரத்திற்குள்ளே யூரோக்கிலிதோன் எனும் கடுங்காற்று கப்பலில் மோதிற்று. காற்றுக்கு எதிர்த்துப் போகக்கூடாதபடியினால் காற்றின் போக்கிலே கொண்டு போகப்பட்டோம். கப்பலை இலகுவாக்கும்படி சில சரக்குகளைக் கடலில் எறிந்தோம். அநேக நாளாய் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாததினால், இனி தப்பிப் பிழைப்போம் மென்கிற நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் பவுல் அவர்களை நோக்கி: மனுஷரே பயப்படாதிருங்கள் திடமனதாயிருங்கள். ஏனென்றால் என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவிருமான தேவனுடைய தூதனானவன் இரத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று: பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனே கூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்கு தயவு பண்ணினார் என்றான். ஆனாபடியினால் எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன் என்றான்.

பதினாலாமம் இராத்திரியானபோது, கப்பலாட்களுக்கு ஒரு கரை கிட்டி வருவதாக தோன்றிற்று. இதுதான் உள்ளங்கை மேகம். நம்பிக்கையற்ற நிலையில் ஓர் நம்பிக்கை உண்டானது. உடனே அவர்கள் விழுதுவிட்டு இருபது பாகம் என்றும், சிறிது

நேரத்திற்குப்பின் பதினைந்து பாகமென்றும் கண்டார்கள். உடனே அவர்கள் கப்பலிலிருந்து நாலு நங்கூரங்களைப் போட்டு, பொழுது எப்போது விடியுமோ என்றிருந்தார்கள். பொழுது விடிந்தபின்பு ஒரு சமமான கரையுள்ள துறைமுகம் அவர்களுக்குத் தென்பட்டது. இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரை சேர்ந்தார்கள்.

அன்புநேசப்பிள்ளைகளே! நம்பிக்கையற்ற நிலையில் இருந்த அவர்களுக்கு ஒரு கரை கிட்டிய அனுபவமானது, உள்ளங்கை மேகம் எழும்புகிற அனுபவமாகும். அந்த அடையாளமானது அவர்களுக்கு தைரியத்தையும், செயல்படக்கூடிய பெலனையும் கொடுத்தது. அதின்படி பிரயாசப்பட்டு எல்லாரும் தப்பிக் கரைசேர்ந்தார்கள்.

உங்கள் வாழ்விலும் கரைசேர முடியாத, விடை கண்டுபிடிக்க முடியாத, வழியறியாமல் அடைக்கப்பட்ட நிலையில் இருக்கிறீர்களா? உங்கள் வாழ்வில் ஓர் விடுதலையின் மேகம் எழும்புகிறது. அப்பொழுது அடைக்கப்பட்ட கதவுகள் தானாக திறக்கும்....

எனக்கன்பானவர்களே! மனுஷரால் இது கூடாததுதான் நாம் ஆராதிக்கிற தேவன் சர்வவல்லமையுள்ளவர். எந்தக் காரியத்தில் நீங்கள் நம்பிக்கையற்ற நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அவர் அறிவார். வசனத்தைக் கவனியுங்கள்.

**1. ஏசா. 43:14 – நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்.**

**2. எபி. 2:18 – கர்த்தர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்.**

இந்த வருஷத்திலே உங்களுக்கும் ஓர் உள்ளங்கை மேகம் எழும்புகிறது. நீங்கள் கரை ஏறுவீர்கள், கட்டப்படுவீர்கள். நிச்சயமாகவே முடிவு உண்டு. உங்கள் நம்பிக்கை வீண் போகாது. சிறையிருப்பிலிருந்து யோசேப்பு, அதிபதியாக உயர்த்தப்பட்டதுபோல நீங்களும் வெட்கப்படுத்தப்பட்ட, அபாண்டமாய்ப் பழிசுமத்தப்பட்ட இடத்தில் நிமிர்ந்து நிற்பீர்கள். கர்த்தரே அதைச் செய்கிறவர்.

## 3. எதிர்பார்த்துத் தேடியதை இழந்த நிலையில்...

**இதோ, இந்தப் பட்டணத்திலே தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார்; அவர் பெரியவர்; அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும்; அங்கே போவோம்; ஒருவேளை அவர் நாம் போகவேண்டிய நம்முடைய வழியை நமக்குத் தெரிவிப்பார் என்றார். (1சாமு. 9:6)**

சவுலின் தகப்பனாகிய கீசுடைய அழுகைகள் காணாமற்போயிற்று; ஆகையால் கீஸ் தன் குமாரனாகிய சவுலை நோக்கி: நீ வேலைக்காரரில் ஒருவனைக் கூட்டிக்கொண்டு, கழுதைகளைத் தேட, புறப்பட்டுப் போ என்றான். மூன்று நாளாகத் தேடியும் அவைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், சவுல் தன் வேலைக்காரனை நோக்கி: என் தகப்பன், கழுதைகளின் மேலுள்ள கவலையை விட்டு, நமக்காகக் கவலைப்படாதபடிக்கு, நாம் திரும்பிப் போவோம் வா என்றான்.

அன்பு நேசப்பிள்ளைகளே! சவுலும் வேலைக்காரனும் காணாமற்போன கழுதைகளை மூன்று நாளாய்த் தேடி அலைந்து, திரிந்தும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் ஏமாற்றத்துடன் இருக்கிறார்கள். இனிமேலும் தேடியலைவதில்

நடுவர் தீர்ப்பு முடிவானது. (எண். 22:32)

➠

பிரயோஜனமில்லை. கழுதைகள்தான் காணாமற்போயிற்று என்றால் இப்போது, மகனையும் காணவில்லையே என்று தகப்பன் நம்மேல் கவலைப்படாதபடிக்குத் திரும்பிப் போவோம் வா என்றான்.

அப்பொழுது வேலைக்காரன் கொடுக்கிற ஆலோசனையானது உள்ளங்கை மேகமாகும். தீர்க்கதரிசியாகிய சாமுவேலைக் குறித்து அவன் நன்றாக அறிந்திருக்கிறான். அவர் சொல்வதெல்லாம் தப்பாமல் நடக்கும். ஆகையால் அவரிடத்தில் போவோம் என்று சவுலையும் அழைத்துச் செல்கிறான். சாமுவேலினிடத்தில் போய் விசாரித்தபோது, காரியம் வெளிப்பட்டது. சாமுவேல் அவர்களை நோக்கி: மூன்று நாளைக்கு முன் காணாமற்போன கழுதைகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவைகள் அகப்பட்டது என்றான்.

எனக்கன்பானவர்களே! வாழ்க்கையில் பாதையில் சோர்ந்து, தளர்ந்து, பெலனற்ற வேளைகள் வரும்போது, நல்ல ஆலோசனைகள் நமக்கு உள்ளங்கை மேகமாகும். அதைச் சரியாய் நாம் புரிந்து செயல்பட ஒப்புக்கொடுக்கும்போது காரியம் ஜெயமாக முடிகிறது. அனுபவங்களைக் கவனியுங்கள்.

**1. 2 இரா. 5:3 – என் ஆண்டவர் சமாரியாவில் இருக்கும் தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்.**

**2. 2இரா. 5:13 – தகப்பனே , அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தார். அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும்போது, அதைச் செய்ய வேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள்...**

நாகமான் அந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, செயல்பட்டதினால் குஷ்டரோகம் நீங்கி, அவன் மாம்சம் சிறுபிள்ளையின் மாம்சம்போல மாறி சுத்தமானான். ஆலோசனைகளைக் குறித்த வார்த்தைகள்.

**1. நீதி. 2:11 – நல்யோசனை உன்னைக் காப்பாற்றும்.**

**2. நீதி. 11:14 – ஆலோசனை இல்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள்.**

**3. நீதி. 20:12 – ஆலோசனையினால் எண்ணங்கள் ஸ்திரப்படும்.**

**4. நீதி. 24:6 – ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங் கிடைக்கும்.**

அன்பு நேசப்பிள்ளைகளே! இழந்தது இழந்ததுதான் என்ற நினைவுடன் இருந்த சவுல், சாமுவேலுக்கு நேராகத் திருப்பப்பட்டான். ஜெயம் பெற்றான். புது வருடத்திற்குள் பிரவேசிக்கிற நீங்கள், எவைகளைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறீர்கள், சகலவற்றையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய்ச் செய்கிற இயேசுவிடம் கொண்டு வாருங்கள். அப்பொழுது நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். காரணம் அவர் சொல்வதைப் பாருங்கள்.

**1. உபா. 1:17 – உங்களுக்குக் கடினமாயிருக்கும் காரியத்தை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்.**

**2. சங். 55:22 – கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு.**

**3. 1பேது. 5:7 – உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.**

பக்தன்பாடுகிறான்.

இழந்தது இழந்ததுதான்.
இனி கிடைக்காது என்பது உன்
இருதயத்தின் நினைவல்லவோ –உன்
நினைவை நான் அதம் பண்ணுவேன் – என்
நினைவையோ நிலைப்படுத்துவேன்.

## 4. துர்ச்செய்தியின் மத்தியில் ஓர் நற்செய்தி

**ஒரு எகிப்தியனை வயல்வெளியில் அவர்கள் கண்டு, அவனைத் தாவீதினிடத்தில் கொண்டு வந்து, புசிக்க அவனுக்கு அப்பமும் குடிக்கத் தண்ணீரும் கொடுத்தார்கள்... (1சாமு. 30:11)**

தாவீது மிகவும் நெருக்கப்பட்டான். தாவீதும் அவன் மனுஷரும் சிக்லாக் பட்டணத்திற்கு வந்தபோது, அது அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது என்றும், தங்கள் மனைவிகளும், தங்கள் குமாரர் தங்கள் குமாரத்திகளும் சிறைபிடித்துக் கொண்டு போகப்பட்டார்கள் என்றும் கண்டார்கள். தாவீதும் அவன் ஜனங்களும் தங்களுக்கு அழுகிறதற்குப் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள்.

தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு, கர்த்தரிடத்தில் போய் விசாரித்தான். அதற்குக் கர்த்தர் நீ போ, அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக்கொள்வாய் என்றார். கர்த்தருடைய வார்த்தையின்படி அவர்கள் செயல்பட்டு, ஒன்றும் குறைவுபடாமல் எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டார்கள். இதுசரித்திர சம்பவம்.

அன்பு நேசப்பிள்ளைகளே! இங்கு உள்ளங்கை மேகம் என்பது என்ன? என்பதையும் அறிந்து கொள்வோம். அமலேக்கியர் வந்து இவர்கள் மனைவி, பிள்ளைகளைச் சிறைபிடித்துச் சென்றுவிட்டார்கள். தாவீதும், அவன் ஜனங்களும் அமலேக்கியரை தொடர்ந்து செல்லும்போது, அமலேக்கியரின் சேனையிலுள்ள ஒரு எகிப்தியனைக் கண்டு, அவனைத் தாவீதினிடத்தில் கொண்டு வந்தார்கள். அவன் மூன்று நாளாய் அப்பம் சாப்பிடாமலும், தண்ணீர் குடியாமலும் இருந்தான். அவனுக்கு ஆகாரம் கொடுத்ததினால் அவன் உயிர் அவனுக்கு திரும்ப வந்தது.

இந்த எகிப்திய வேலைக்காரனே உள்ளங்கை மேகமாகும், இவன் மூலமாக, தாவீது அமலேக்கியரைத் தொடர்ந்து, அவர்கள் இருக்கிற இடத்திற்குப் போனான். தாவீது அவர்களை அன்று சாயங்காலம் தொடங்கி, மறுநாள் சாயங்காலமட்டும் முறிய அடித்தான். அமலேக்கியர் பிடித்துக்கொண்டுபோன எல்லாவற்றையும் தாவீது விடுவித்தான்.

தகப்பனாகிய யாக்கோபு தன் மகன் யோசேப்பை அழைத்து, ஆடுகள் மேய்க்கப் போயிருக்கிற உன் சகோதரர்களை நீ போய், சந்தித்து, விசாரித்து வா, என்று அனுப்பினான். அவன் அவர்களை வழக்கமாய் தேடுகிற இடத்தில் அவர்களைத் தேடி காணாதபடி அலைந்து கொண்டிருக்கிறான். அப்பொழுது அங்கு வந்த ஒரு மனிதன் அவனிடத்தில், "நீ என்ன தேடுகிறாய்" என்று கேட்டான். அதற்கு யோசேப்பு, நான் என் சகோதரர்களைத் தேடுகிறேன். அவர்கள் எங்கே போனார்கள் என்று சொல்லும் என்றான். அதற்கு அந்த மனிதன் அவர்கள் தோத்தானுக்குப் போவோம் என்று சொல்லக்

பழைய சேலைக்கு புது பாடரா?. (எரே. 6:14)

➠

கேட்டேன் என்றான். அதின்படி யோசேப்பு, தோத்தானுக்குப் போய் அவர்களைக் கண்டு பிடித்தான். அந்த மனிதன் தேவனால் அனுப்பப்பட்ட தூதனாயிருக்கலாம். வசனத்தைக் கவனியுங்கள்.

**வழியிலே உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தலத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்...(யாத். 23:20)**

எனக்கன்பானவர்களே! உங்கள் வாழ்க்கையிலும் நீங்கள் வழியறியாமல், செய்வது என்னவென்று தெரியாமல், விசாரிக்க முடியாமல் தளர்ந்துபோய் நிற்கிறீர்களா கர்த்தர் தமது தூதனை அனுப்பி அற்புதம் செய்வாராக! உங்கள் வாழ்விலும் ஒரு உள்ளங்கை மேகம் எழும்புகிறது. அதுவே உங்கள் விடுதலையின் அடையாளமாக இருக்கும்.

உங்கள் காரியம் ராஜாவின் சமூகத்தில் பேசப்படும்பொழுது, நம்பிக்கை அற்றுப்போன நிலையில், எதிர்பார்த்துத் தேடியது இழந்தபோன நிலையில், துர்ச்செய்தின் மத்தியில் நற்செய்தி உண்டாகும்போது, உள்ளங்கை மேகம் எழும்புகிறது. இந்த அற்புத ஆரம்பத்துடன் பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது. ஆசீர்வாதமான மழை பெய்யும். நீங்கள் ஆசீர்வாதமாய் இருப்பீர்கள். ஆமென்! அல்லேலூயா!!

## ஜெப சேனை ஜெபக் குறிப்புகள் [ஜனவரி 2026]

**1. மத்திய, மாநில அரசுகள் ஒருமனப்பட்டு செயல்பட...**
**2. மாநில அரசுகளின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படாமலிருக்க...**
**3. போக்குவரத்து துறைக்காக (விமானம், கப்பல், புகைவண்டி, பேருந்து)**
**4. விலைவாசி அதிகரிப்பு, ஜி.எஸ்.டி அதிகரிப்பு – இவைகளுக்காக...**
**5. 2026–ல் நடக்கயிருக்கும் தேர்தலுக்காக...**



**6. ஆன்லைன் சூதாட்டம், போதைப்பொருட்கள் நீங்கும்படியாக...**
**7. மாணவ மாணவியரிடையேயுள்ள தவறான பழக்கங்களுக்காக...**
**8. செல்போன் மூலமாக உண்டாகிற பாவ சாபங்களில் பிள்ளைகள் சிக்காமலிருக்க...**
**9. நமது இயேசு ஜீவிக்கிறார் ஊழியங்கள், ஊழியர்கள், விசுவாசிகளுக்காக...**
**10. நமது ஜெப சேனை, TV நிகழ்ச்சிகள், பத்திரிக்கைகள், புத்தக வெளியீடு, பாடல் ஊழியங்களுக்காக...**



## நடப்புச் செய்திகள்



1. பெண்கள் உதவித்தொகை மேலும் உயரும் - முதல்வர்
2. திருப்பரங்குன்றம் மலை உச்சியில் இருப்பது சர்வே தூண்.
3. மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு ரூ. 11,718 கோடி.
4. 93 பேர் மட்டுமே வசிக்கும் மாஞ்சோலையில் 1100 வாக்காளர்கள் பதிவேற்றம்
5. 75 ஆண்டுகள் இல்லாத அளவுக்கு ரூபாய் மதிப்பு சரிந்து விட்டது.
6. புதுச்சேரியில் போலி மருந்து தயாரித்தது அம்பலம்

ஓட்டைத் தோண்டியும் குடத்தை நிரப்பும் (பிலி. 4:19)

➡

# தேவன் இப்படியும் பேசுவாரா!

## 1. மேகம் மந்தாரத்தை உண்டாக்குமே தவிர, இருளையல்ல.

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! துன்ப மேகம் உம்முடைய வெளிச்சத்தைக் குறைத்துவிடாதபடி காத்துக்கொள்ளும் என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், “என்பிள்ளையே! மேகத்தினால் சூரியனை மறைக்க முடியுமே தவிர மூடமுடியாது. எனவே மந்தாரம் உண்டாகும் இருள் உண்டாகாது. அதுபோலவே, துன்பங்கள் வளர்ச்சியின் வேகத்தைக் குறைக்குமேயொழிய நிறுத்த முடியாது” என்றார்.

**மேகஸ்தம்பம், எகிப்தியருக்கு மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது, இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று...(யாத். 14:20)**

## 2. வெளிச்சம் உள்ளவன் இருளுக்கு பயப்படமாட்டான்!

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! பகலில் இருக்கின்ற மனதைரியம், இரவை நெருங்கும்போது, குறைகின்றதே ஏன் என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், “என்பிள்ளையே! பகல், இரவு என்பது மனிதனுக்கு நியமிக்கப்பட்ட காரியம். இரவு நேரம் நெருங்கும்போது, பயம் வருகிறதென்றால், வெளிச்சத்தின் நிச்சயம் இல்லாததே காரணம். விசுவாச வாழ்க்கையின் பாதையில் ஒளியாகிய இயேசு கூட இருந்தால், எந்த இருளை குறித்தும் பயம் இருக்காது. அவரே நமக்கு வெளிச்சமாயிருக்கிறார்” என்றார்.

**இருளை வெளிச்சம் தொடர்ந்து வரும் என்று எண்ணச் செய்தது...(யோபு 17:12)**

## 3. உள்ளத்தின் மகிழ்ச்சி, வெளியில் நெகிழ்ச்சி

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! வாழ்க்கையின் பாதையில் மீண்டும் மீண்டும் தடைகள் வருவது ஏன்? என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், “என் பிள்ளையே! நீ ஏன் தடைகளை பாரமாக நினைக்கிறாய்? அதை ஏன் நன்மையாக ஏற்றுக் கொள்ளக்கூடாது. சாலைகளில் வேகத்தடை நமது நன்மைக்காகத் தானே. கவனமாய், நிதானமாய், அமைதலாய், ஆரோக்கியமாய் பயணம் செய்வதற்காகத் தானே” என்றார்.

**என் உதடுகளின் அசைவு உங்கள் துக்கத்தை ஆற்றும்... (யோபு 16:5)**

மற்றவர்களை குறை சொல்லாதே (ஏசா. 1:22)

# தூண்டில்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! விடைகளை வெள்ளைத் தாளில் எழுதி, வருகிற 20ஆம் தேதிக்குள் எனக்குக் கிடைக்கும்படியாக அனுப்புங்கள். கடைசி இரண்டு கேள்விகளும் ஆகமங்களில் உள்ளது.

**ஜனவரி 2026** **தூண்டில் போடுங்கள், வலை (Internet) விரிக்காதீர்கள்.**

1. தேவன் அதைப் பார்த்துக் கண்டிப்பாராக – என்றது யார்?
2. யார் அதைப் பரிசுத்த குலைச்சலாக்குவார்கள்?
3. யார் என்னைக் கண்டு ஒளித்துக்கொள்வார்கள்?
4. நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள் – என்றது யார்?
5. என் பிறகே திரும்பி வா – என்றது யார்?
6. எதினால் வெளிச்சம் இருண்டுபோம்?
7. இனி நீ இருக்கமாட்டாய் – என்றது யார்?
8. இதுதான் அவர்களுடைய கண்ணோக்கம் – என்றது யார்?
9. யாருடைய செயல்களை நினைவு கூறுவேன்?
10. யார் என்னைக் கேட்டருளுவார்?
11. நீ நடந்து வருகிறதை யார் அறிவார்?
12. நீர் எனக்கு சொன்னபடியே செய்தேன் – என்றது யார்?

## 2025 டிசம்பர் மாத மீன்கள்

1. 2இரா. 18:14 – எசேக்கியா
2. தானி. 8:27 – தானியேல்
3. நெகே. 2:12 – நெகேமியா
4. எசே. 32:4 – தரையிலே
5. ஆதி. 26:10 – அபிமெலேக்கு
6. யோபு 27:11 – சர்வ வல்லவரிடத்தில்
7. 2இரா. 8:12 – ஆசகேல்
8. சக. 2:6 – கர்த்தர்
9. சங். 37:13 – ஆண்டவர்
10. 2சாமு. 18:4 – ராஜா
11. வெளி.2:20 – யேசபேல்
12. பில. 1:22 – ஓரிடத்தை

## 2025 நவம்பர் மாதம் மீன் பிடித்தவர்கள்

01. Mrs. பியூலா ஜெசுராஜன் – புதுச்சேரி
02. Mrs.D. ஜெபக்குட்டி மோசஸ் – மருதகுளம்
03. Mrs. ஹெலன் சுவிட் – டோனாவூர்.
04. Mrs. ஷெர்லி சாம் – அரக்கோணம்
05. Mrs. சுசிலா ஜெயக்குமார் – அரக்கோணம்.
06. Sist. அலீஸ் குணசீலி – சாயர்புரம்.
07. Mrs. J. ஜான்சி – ஆனைமலை

## 2025 நவம்பர் மாதம் மீன் பிடிக்க பிரயாசப்பட்டவர்கள்

01. Mrs. D. அன்னபாக்கியம் தினகரன்– மதுரை
02. Mrs. வசந்தா செல்வராஜ் – கள்ளக்குறிச்சி

Registered News Paper
R.n.i. No : Tntam / 2004 / 12805. Postal Regn. No : Tvl / 005 / 2021 - 2023
Date of Publication : 01.01.2026



# இயேசு ஜீவிக்கிறார் வெளியீடுகள்

தேவ கிருபையினால் பாடல் CD–க்களும், புத்தகமும் வெளியிடக் கர்த்தர் உதவி செய்தார். ஜீவ கீதங்கள் பாடல்களும் மற்றும் புதிய புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளது. ஜெபத்துடன் பெற்று பயனடையுங்கள்.

## பதிவுத் தபாலில் அனுப்பிட செலவு தனி

1. ஜீவ கீதங்கள் (ACD) (Vol : 1 to 24)
2. ஜீவ கீதங்கள் (VCD), MP3
3. கேட்கும் கிருபை
4. ஜீவ கீதங்கள் (220 + 35 பாடல்கள்)
5. தேவன் இப்படியும் பேசுவாரா! (Part 1-8)
6. நோவாவின் பேழை
7. வளரும் செடி
8. மனிதன்
9. வெற்றியுள்ளவன்
10. முதலாம் அற்புதம்
11. வாலிபனே நீ யார்?
12. என் இருதயத்திற்கு ஏற்றவனான தாவீது
13. ஜலத்தினின்று எடுக்கப்பட்டவன்
14. தேவன் தெரிந்த நாகமான்
15. ஊழியரே இது உங்களுக்காக (50 செய்திகள்)
16. டோனாவூரம்மா
17. நான் கண்ட சகேயு
18. ஜீவ விதைகள் (150 பிரசங்க குறிப்புகள்)
19. நகோமி
20. அந்த ராத்திரியிலே...

**JOHN M. JEYARAJ,**
178, Dohnavur Road, Mavadi - 627 107
Tirunelveli Dist., S. India
Phone : (04635) 210 691, Cell : 94431 13292
E-mail : yesujeevikkirar@gmail.com, Website : www.jesuslivesministries.in

Book Post

To

Owned & Published by : John M. Jeyaraj From 123-A, Dohnavur Road, Mavadi - 627107 - Tirunelveli District. Printed by Mr. S. Jairus Ponniah at Swarnapriya Printers, 35/16-A, Tiruchendur Road, Palayamkottai. Tirunelveli Dt. - 627 002. Editor : John M. Jeyaraj